# சட்டத்தின் ஆட்சிப்படுத்தல், நீதித்துறையின் சுயாதீனம் ஆகியவற்றுக்காக அனைவரும் ஒன்றிணையவேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவிப்பு

(ரொபட் அன்டனி எம்.பி.எம். பைறூஸ்)

நாட்டில் நீதி மற்றும் சமத்துவத்திற்காக குரல் கொடுக்கவும் சட்டத்தின் ஆட்சிப்படுத்தல் மற்றும் , நீதித்துறையின் சுயாதீனத்துக்காக குரல் கொடுக்கவும் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

நாட்டின் நடப்பை அடக்குமுறையில் இருந்து பாதுகாக்க அனைத்து சிவில் சமூக உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தெற்காசிய கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனத்தின் மத நல்லிணக்கம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது

மதங்கள் ஒருபோதும் அதன் விருப்பு வெறுப்புக்களை பொது மக்கள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ திணிக்க முயற்சிப்பதில்லை. மத சுதந்திரம் என்பது பிரிக்க முடியாததொன்றாகும். மதவழிபாட்டுக்கான இடமொன்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையானது அவ்வாறான அனைத்து இடங்களுக்கும் எதிரான நடவடிக்கைக்கு ஒப்பானதாகும்.

நாட்டில் வன்முறையால் இலக்கு வைக்கப்படுவது கிறிஸ்தவ தேவாலயமாகவோ, முஸ்லிம் பள்ளிவாசலாகவோ அல்லது விகாரையாகவோ இருக்கலாம். இது நாளை ஒரு சமூகம் இன்னுமொரு சமூகத்துக்கு எதிரானதாகவும் மாறலாம். இதில் இன்று பாதிக்கப்படுவது நானாகவும் நாளை பாதிக்கப்படுவது நீங்களாகவும் இருக்கலாம். அத்துடன் ஒற்றுமையான அனைத்து சமூக அமைப்பும் சிதைந்து போகும் வரை இது தொடரலாம்.

அதாவது எமது சொந்த நிகழ்ச்சி நிரல்களையும் திரிபுபடுத்தல்களையும் அப்புறப்படுத்தும் வரை மத சகிப்புத்தன்மையின்மை என்பது முடிவுக்கு வராது.

ஒரு நாட்டின் தலைமைத்துவத்தின் மத அபிப்பிராயங்களானது அவரது தனிப்பட்ட சொந்த விடயமாக இருக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும். அது அவர் அந்த பதவியை வகிப்பதற்கான நிபந்தனையாக தேசத்தின் மீது அவர் திணிப்பதாகவோ அல்லது அவர் மீது தேசம் திணிப்பதாகவோ இருக்கக்கூடாது.

மத சுதந்திரத்துக்கான உத்தரவாதம் மற்றும் சட்டத்தின் முன்னிலையில் சமத்துவத்துக்கான அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம் ஆகியவற்றை சிதைப்பதற்கு நாடொன்றின் தலைமைத்துவம் செயற்படுவதை சாதகமாக பார்க்க முடியாது. காணப்படுகின்ற குறை, நிறைகளை ஆராய்ந்து கட்டுப்படுத்தும் முறைமையும் கூட இதற்கு இடமளிக்காது.

மக்களுக்கும் சொத்துக்களுக்கும் அதற்கு மேலாக குறித்த சில இனக் குழுமங்களினது உணர்வுகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தி குற்றவியல் சட்டத்தை அப்பட்டமாக மீறிச் செயற்படும் சக்திகளுக்கு மத்தியில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் வாயடைத்து நிற்பதைக் காணும் துரதிஷ்டத்தில் எமது நாடு இருக்கின்றது.

எமது மொத்த சமூக கட்டமைப்பும் சீர்படுத்த முடியாத வகையிலும் மீட்க முடியாத வகையிலும் சிதைக்கப்படுகின்றது என்றார்.